நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.47/2021

அரசு தரப்புக்காக அ.சா.5 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதி | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 6 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28th day of January 2026.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.56)

நான் தற்போது காட்டுமன்னார்கோயிலில் குடியிருந்து பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கம்ப்யூட்டர் ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 2020 ஆம் வருடம் ஜூலை மாதம் 5ஆம் தேதி காட்டுமன்னார்கோயில் போலிசார் சம்பவம் நடந்த பாரதி தெருவிற்கு வந்து என்னிடம் என்ன நடந்தது என்று கேட்டார்கள். சம்பவம் நடந்தது தெரியுமா என்று கேட்டார்கள் நான் அந்த சமயத்தில் இல்லை என்று சொன்னேன். அதன் பிறகு சம்பவம் நடந்த இடத்தில் மேப் போட்டார்கள். சம்பவ நடந்த இடம் என்று நான் சொல்வது ராஜேந்திரன் வீட்டிற்கும் செந்தில் வீட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் நடந்தது.

போலிசார் தயார் செய்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். (அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பகுதியாக ஆதரவு அளிக்காத நிலையில் ஏற்கனவே போலீசார் விசாரணையில் விசாரித்த போது கூறியிருப்பதை மறுத்துள்ள நிலையில் இந்த சாட்சியிடம் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய இந்திய சாட்சி சட்டப்பிரிவு 154ன் கீழ் அனுமதி கோரினார். இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154–ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை–</u>

போலிசார் என்னை விசாரித்தபோது 04.07.2020 ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணி அளவில் செந்தில் வீட்டில் ஒரே கூச்சலும் அழுகுரலுமாக கேட்டபோது நான் ஓடி சென்று பார்த்தபோது செந்தில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு வலியில் துடிக்கும்போது தடுக்க வந்த அவரது மனைவி எழிலரசியை என் கண் எதிரே ராஜேந்திரன் அவர் கையில் வைத்திருந்த ரத்தக்கறையுடன் கூடிய ஸ்டீல் கத்தியால் "நீயும் இதோடு ஒழிந்து போடி தேவிடியா அப்பதான் நான் நிம்மதியாக இருக்க முடியும்" என்று சொல்லி கொண்டே பலமாக அவரது இடது பக்க வயிற்றில் குத்தி பலத்த ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும் அதனால் எழிலரசியின் குடல் வெளியே வந்தது என்றும் இதை பார்த்த பாலச்சந்தரும் செந்தில் வீட்டில் இருந்து வந்த அவர்களது உறவினர்களும் சேர்ந்து ராஜந்திரனை பார்த்து சத்தம் போட்டும் கூச்சல் இட்டுக்கொண்டே தடுத்தபோது "தேவிடியா பையா இன்னிக்கு தப்பிச்சிட்ட என்னைக்கா இருந்தாலும் என் கையால தாண்டா உனக்கு சாவு" என்று கத்தியை காட்டி ராஜேந்திரன் செந்திலை பார்த்து மிரட்டிவிட்டு கத்தியுடன் செந்தில் வீட்டிற்கு இடது புறம் உள்ள புதர் பக்கமாக தப்பி ஓடினார் என்றும் பலத்த இரத்த காயம் அடைந்த செந்திலையும் அவர் மனைவியையும் ஆம்புலன்ஸ் மூலம் காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு போனார்கள் என்றும் செந்திலுக்கும் அவர் மனைவி எழிலரசிக்கும்

காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துமனைக்கு சிகிச்சை அளித்தனர் என்றும் சிகிச்சையில் இருந்த செந்திலிடம் என்ன ஏது ஏன் இப்படி நடந்தது என்று நாங்கள் கேட்க நேற்று காலை எதிர் வீட்டு ராஜேந்திரனின் நாய் தன் வீட்டிற்குள் ஏற்கனவே வந்ததை தான் ரஜேந்திரனிடம் ஏன் உன் நாய் என் வீட்டிற்குள் வருகிறது என்றும் நாயை ஒழுங்கா வளர்க்க தெரியாதா உனக்கு நாய் ஒரு கேடா என்று கோபமாக கேட்டதாகவும் அதற்கு ராஜேந்திரன் "என் நாய் வந்தா என்னடா" என்று கேட்க தான் உன் வீட்டு நாயை உன் வீட்டோடு வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டு போய்விட்டதாகவும் அதன் பிறகு தான் பேக்கரியில் வேலை முடிந்து மதியம் சாப்பிட வீட்டிற்கு சென்று மதியம் சுமார் 2.30 மணிக்கு வீட்டில் இருக்கும்போது எதிர் வீட்டு ராஜேந்திரன் தன் வீட்டு வாசலில் நின்றுகொண்டு "ஏய் தேவிடியா பயலே" "செந்தில் பொட்ட பயலே வெளியே வாடா" என்று சத்தம்போட்டு கூப்பிட்டதாகவும் தான் உடன் வீட்டில் இருந்து வெளியே வந்து ஏன் என்னை அசிங்கமா திட்டுற என்று கேட்டதாகவும் அதற்கு ராஜேந்திரன் உன்னால தாண்டா என் நாயை எங்கள் ஊருல கொண்டுபோய் விட்டுடேன். "தேவிடியாக பயலே நீ இருந்தாதாண்டடா எனக்கு பிரச்சனை இத்தோடு ஒழிந்து போடா"என்று சொல்லிக்கெண்டே தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த ஸ்டீல் கத்தியை எடுத்து தன் இடது மார்பு, இடது விலா முதுகில் கத்தியால் 3 முறை குத்தி பலத்த குத்து காயம் ஏற்பட்டு ரத்தம் வெளியேறியதை பார்த்த தன் மனைவி எழிலரசி வந்து தடுத்தபோது தன் மனைவியை ராஜேந்திரன் கத்தியால் "நீயும் இத்தோடு ஒழிந்துபோடி தேவிடியா" அப்பதான் நான் நிம்மதியாக இருக்கமுடியும் என்று சொல்லி ரத்த காயம் ஏற்படுத்தினார் என்று சொன்னார் என்றும் பின்னர் அவர்களை மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் 05.07.2020–ம் தேதி போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்தபோது சொன்னதாக சொல்லிவிட்டு தற்போது எதிரி ஒரே ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் கையெழுத்து போட்ட அ.த.சா.ஆ.2 ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் படித்து பார்க்கவில்லை.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.18)

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.